exyte

Bringing the future
of technology to life



05/2022 ta

exyte.net

# Code of Conduct

COMPLIANCE
» The right way « exyte



exyte

COMPLIANCE
» The right way « exyte

# Code of Conduct

## பொருளடக்க அட்டவணை

நிர்வாக வாரியத்திடமிருந்து செய்தி 4
01 | இணக்கம் உங்கள் பொறுப்பு 6
02 | ஊழல் மற்றும் லஞ்சத்தைத் தடுக்கவும் 8
2.1 வணிகக் கூட்டாளிகளைக் கையாளுதல் 10
2.2 அரசு அதிகாரிகளைக் கையாளுதல் 13
2.3 முகவர்களையும் ஆலோசகர்களையும் ஈடுபடுத்துதல் 14
2.4 நன்கொடைகள் மற்றும் நிதியளிப்புகளுக்கான விதிகள் 15
03 | நியாயமான விதிமுறைகளின் அடிப்படையில் போட்டியிடவும் 16
04 | கருத்து வேறுபாடுகளைத் தடுக்கவும் 17
05 | சுயாதீனமான மதிப்பாய்வை உறுதிசெய்யவும் 18
06 | துல்லியமான மற்றும் வெளிப்படையான நிதிப் பதிவேடுகளைப் பராமரிக்கவும் 19
07 | நிறுவனத்தின் சொத்துகளை கவனமாக கையாளவும் 20
7.1 சொத்துப் பாதுகாப்பு 20
7.2 இரகசியத் தகவல்களைப் பாதுகாத்தல் 21
08 | உள்நபர் வர்த்தகம் கூடாது 22
09 | பன்முகத்தன்மை மற்றும் நியாயமான உழைப்பு 23
10 | Exyte Code of Conduct-ஐ அமல்படுத்தவும் 24
உங்கள் தொடர்புகள் 27

# நிர்வாக வாரியத்திடமிருந்து» செய்தி

**அன்பார்ந்த சக ஊழியர்களுக்கு,**

அனைத்து வணிகப் பகுதிகள் முழுவதும் உயர்வான நன்னெறி, தார்மீக மற்றும் சட்டரீதியான தரநிலைகளுக்கு இணங்க வணிகத்தை நடத்தவேண்டும் என்பது நமது பெருநிறுவனக் கொள்கை ஆகும். முதலாவதும் முக்கியமானதுமாக, அனைத்து பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளை நாம் கடைப்பிடிக்கிறோம் என்பது இதன் பொருள் ஆகும் – இருந்தாலும் ஒரு முக்கியமான செயல்திட்டத்தை வெல்லாமல் இருப்பது அல்லது ஒரு வணிக இலக்கைத் தவறவிடுவது என்பதை இது குறிக்கவில்லை.

ஆயினும், Exyte-இல் இணக்கம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. நாங்கள் வணிகக் கூட்டாளிகளுக்காகவும் சக ஊழியர்களுக்காகவும் நேர்மையுடனும் மரியாதையுடனும் செயல்படுகிறோம். Exyte-இல், நேர்மையையும் நம்பிக்கைக்குரிய வணிகத்தையும் விலையாகக் கொடுத்து வருவாய் மற்றும் இலாபத்தை அதிகரிப்பதில் நாங்கள் திட்டவட்டமாக ஆர்வம் காட்டுவதில்லை. Exyte-யின் நிர்வாக வாரியத்தின் உறுப்பினர்களாகிய நாங்கள் நமது நடத்தைக்கான உயர்வான தரநிலைகளை நிர்ணயித்துள்ளோம் மற்றும் Exyte-இன் ஒவ்வொரு பணியாளர்களிடம் இருந்தும் நாங்கள் அதையே எதிர்பார்க்கிறோம்.

உலக மயமாக்கலும், அதிக சிக்கலான ஒழுங்குமுறைச் சூழ்நிலைகளும் இணக்கத்தை மென்மேலும் சவாலானதாக ஆக்குகின்றன என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். இந்தச் சவால்களை நீங்கள் திறமையுடன் அடக்கியாளுவதற்கு, Code of Conduct உங்களுடைய அன்றாட வணிகத்துக்கான நடைமுறை வழிகாட்டுதலை வழங்கும்.

Exyte Code of Conduct என்பது ஒரு கொள்கையை விட சற்று மேம்பட்டதாகும். இது நமது வணிக நடத்தை அனைத்தின் அடிப்படையாகவும் அளவுகோலாகவும் விளங்குகிறது. ஒரே ஒரு இணக்கமில்லாத நிகழ்வு இருந்தாலும் கூட அது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பதையும், அது சந்தையில் Exyte Group பெற்றுள்ள உயர்வான நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தக்கூடும் என்பதையும் எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். நமது வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் மற்றும் இதர பங்குதாரர்கள் நமது நிறுவனத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கை என்பது நம்முடைய மிகுந்த மதிப்புவாய்ந்த சொத்து ஆகும். நிறுவனத்தில் நமது பதவி எதுவாக இருந்தாலும், இந்தச் சொத்தைப் பாதுகாப்பது என்பது நாம் அனைவரும் பகிர்ந்துகொள்ள வேண்டிய ஒரு பொறுப்பு ஆகும்.

## Executive Board



Dr. Wolfgang Büchele
Chief Executive Officer



Peter Schönhofer
Chief Financial Officer

நீங்கள் Exyte Code of Conduct-ஐப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அதை நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் என்னுடைய வாரியத்தின் சக ஊழியர்களும் நானும் எதிர்பார்க்கிறோம். தேவைப்படும்போது பேசுவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும் நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம். தவறான நடத்தை எதையாவது நீங்கள் பார்த்தால் அல்லது உங்களுக்கு சந்தேகம் இருந்தால், தயவுசெய்து Exyte Compliance Team–ஐத் தொடர்புகொள்ளுங்கள்.

Stuttgart, 18.05.2022
டாக்டர். உல்ஃப்கேங் பக்கிள்
நிர்வாக வாரியத்தின்சார்பாக

# 01 | இணக்கம் உங்கள் பொறுப்பு

**Exyte Code of Conduct ஆனது Exyte Group -க்கான சட்ட இணக்கம் மற்றும் ஒழுக்கநெறி நடத்தைக்கான தரநிலைகளை வரையறுக்கிறது மற்றும் தொகுத்துரைக்கிறது.**

நாம் Exyte –க்குள் எப்படி தொடர்புகொள்கிறோம் மற்றும் வேலை செய்கிறோம் என்பதை அது தீர்மானிக்கிறது மற்றும் வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் மற்றும் ஆலோசகர்கள் போன்ற மூன்றாம் தரப்பினருடன் நாம் கொண்டுள்ள தொடர்புகளுக்கான அடித்தளத்தை அது வழங்குகிறது. Exyte Code of Conduct ஆனது அனைத்து Exyte சட்ட ரீதியான நிறுவனங்கள், அலுவலகங்கள் மற்றும் தளங்களுக்குப் பொருந்தக்கூடியதாகும் மற்றும் அது நேரடியாக அனைத்து பணியாளர்கள், இயக்குநர்கள் மற்றும் அதிகாரிகளைக் கட்டுப்படுத்துவதாக இருக்கிறது. மேலும் Exyte ஆனது நமது தரநிலைகளை ஏற்றுக்கொள்ளுமாறு துணை ஒப்பந்ததாரர்களையும் சப்ளையர்களையும் வற்புறுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் முயற்சிக்கும்.

அனைத்து Exyte பணியாளர்களும் Exyte Code of Conduct–ஐப் புரிந்துகொண்டு அதற்கு இணங்கி நடப்பவர்களாகவும், அன்றாட வணிக நடைமுறைகளை மேற்கொள்ளும்போது அதைப் பயன்படுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும். சட்டங்கள் Exyte Code of Conduct–இன் பொருளை எவ்வாறு அறிந்துகொள்வது என உங்களுக்கு நிச்சயமாகத் தெரியாவிட்டால் நீங்கள் Exyte Compliance Team (ethics@exyte.net) இடம் அபிப்பிராயம் கேட்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தவறான நடத்தை எதையாவது நீங்கள் பார்த்தாலோ அல்லது ஒரு விஷயம் சரியில்லாத்தாக அல்லது பொருத்தமற்றதாக இருக்கிறது என நீங்கள் கருதினாலோ, தயவுசெய்து ethics@exyte.net வாயிலாக Exyte Compliance Team–ஐத் தொடர்புகொள்ளுங்கள். நன்னம்பிக்கையின் அடிப்படையில் அளிக்கப்படும் அனைத்துப் புகார்களும் கண்டிப்பான இரகசியத்துடன் கையாளப்படும். புகார் செய்யும் நபருக்கு எதிராக பழிவாங்குதல், தொந்தரவு அல்லது பிற மோசமான நடவடிக்கைகள் ஏதாவது மேற்கொள்ளப்பட்டால் அது பொறுத்துக்கொள்ளப்பட மாட்டாது. நீங்கள் ஒரு அநாமதேயமான புகார் செய்ய விரும்பினால், சுதந்திரமாக ஒரு மூன்றாம் தரப்பு வழங்குநரால் இயக்கப்படுகின்ற Exyte Group Ethics Line–ஐ தயவுசெய்து பயன்படுத்துங்கள் (கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள Exyte இணையம் அல்லது "இணக்கம்" என்ற தலைப்பிலான இன்ட்ராநெட்டை பார்க்கவும்).

சட்டங்களுக்கு அல்லது Exyte Code of Conduct–க்கு இணங்கி நடக்காத நிலையை Exyte பொறுத்துக்கொள்ளாது மற்றும் நமது Code of Conduct–ஐ கடுமையாக அமல்படுத்துவதற்கு பொருத்தமானது என Exyte கருதுகின்ற நடவடிக்கையை அது எடுக்கும் (சிவில் நடைமுறைகள், குற்றவியல் வழக்கு மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் உள்ளிட்ட இன்ன பிற).



Exyte Code of Conduct-க்குஇ ணக்கமாகச் செயல்படுவது »சரியான வழி. எல்லா இடங்களிலும். அனைவருக்கும்.

Speak Up! ethics@exyte.net

It's the right way.

# 02 | ஊழல் மற்றும் லஞ்சத்தைத் தடுக்கவும்

**Exyte ஊழல் மற்றும் லஞ்சத்துக்கு எதிராக ஒரு உறுதியான நிலையை எடுக்கிறது, மற்றும் எங்கள் வணிகக் கூட்டாளிகளிடம் இருந்தும் நாங்கள் அதையே எதிர்பார்க்கிறோம். நாங்கள் யாரிடமிருந்தும், எங்கிருந்தும் லஞ்சம் வாங்குவதில்லை.**

Exyte பணியாளர்களும், Exyte-இன் சார்பாக பணிபுரியும் மற்றவர்களும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, ஒரு பணியாளரிடமிருந்து, அதிகாரியிடமிருந்து அல்லது ஒரு வணிகக் கூட்டாளியின் முகவரிடமிருந்து அல்லது ஒரு அரசாங்க அதிகாரியிடமிருந்து மதிப்புக் கொண்ட எதையும் பரஸ்பரம் அளிக்கவோ, உறுதியளிக்கவோ அல்லது கொடுக்கவோ, கோரவோ, வற்புறுத்திக் கேட்கவோ அல்லது ஏற்கவோ கூடாது.

அனுகூலங்களை அளிப்பது அல்லது ஏற்றுக்கொள்வது பொருத்தமானது என்பதையும், பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் Exyte கொள்கைகளுக்கு இணக்கமானதாக இருக்கிறது என்பதையும் உறுதிசெய்ய வேண்டியது நம் அனைவரின் பொறுப்பாகும். உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால், நீங்கள் Exyte Compliance Team-ஐக் கலந்தாலோசிக்க வேண்டும்.

**Exyte-இல் லஞ்சம் தடை செய்யப்பட்டுள்ளது.**

» நாங்கள் லஞ்சம் வாங்குவதில்லை மற்றும் லஞ்சம் வாங்குவதையும் நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம்.

சட்டத்தை மீறினால் மட்டுமே நாம் வணிகம் செய்ய முடியும் எனில், நம்முடைய வணிக மாதிரியில் ஏதோ தவறு இருக்கிறது என்று அர்த்தம்.

CEO **டாக்டர். டபிள்யு. பக்கிள்**



# 2.1 வணிகக் கூட்டாளிகளைக் கையாளுதல்

**வணிகக் கூட்டாளிகளுக்கும் கிரிமினல் குற்றத்துக்கும் இடையே உள்ள நட்பு ரீதியான சமிக்ஞைக்கு இடையே ஒரு மெல்லிய கோடு மட்டுமே இருக்கிறது, மற்றும் சில நேரங்களில் அந்த இரண்டையும் வேறுபடுத்தி அறிவது கடினமானதாக இருக்கிறது. வணிகக் கூட்டாளிகளுடன் சிறந்த உறவுகளை உருவாக்குவதற்கு கிறிஸ்துமஸுக்கு ஒரு பாட்டில் ஒயின் வழங்குவது அல்லது ஒரு விளையாட்டு நிகழ்ச்சிக்கு அழைப்பு விடுப்பது என்பது ஒரு நட்பு ரீதியான சமிக்ஞையாக இருக்கலாம். ஆயினும், பரிசுகளும் அழைப்பிதழ்களும், குறிப்பாக ஒரு வணிக முடிவு மேற்கொள்ளப்படும் சூழலில் இது நிகழ்ந்தால், அது வணிகக் கூட்டாளியிடம் செல்வாக்குச் செலுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற ஒரு முயற்சியாகக் கருதப்படும். பரிசுகள் மற்றும் உபசாரம் என்று வரும்போது, பணியாளர்களையும் நிறுவனத்தையும் பாதுகாப்பதற்கு பொதுவாக நாங்கள் ஒரு முன்னெச்சரிக்கையான நடைமுறையைப் பின்பற்றுவோம். இருந்தாலும், எந்த வகையான ரொக்கப் பரிசுகளையும் பெறுவதும் கொடுப்பதும் Exyte-இல் கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது.**

## பரிசுகள், உபசாரம் மற்றும் பிற ஆதாயங்களை வழங்குதல்

அரசு அதிகாரிகளுக்கு ஆதாயங்கள் வழங்குவது சட்ட விரோதமானது என்பது பொதுவாக அனைவரும் அறிந்ததே. பெரும்பாலான அதிகார வரம்புகளில் வணிகக் கூட்டாளிகளுக்குப் பொருந்துகின்ற நடைமுறைகள் அனைவருக்கும் தெரியாமல் இருக்கலாம். மேலும், ஒரு பரிசு ஒரு நாட்டில் ஏற்கக்கூடியதாக இருக்கலாம், அதேநேரம் மற்றொரு நாட்டில் அது லஞ்சமாக கருதப்படலாம். இந்த நிச்சயமற்ற தன்மையின் பின்னணிக்கு எதிராக, பரிசுகள் வழங்கும்போது அல்லது வணிகக் கூட்டாளிகளுக்கு அழைப்பிதழ்கள் கொடுக்கும்போது நாங்கள் பொதுவாக சுய கட்டுப்பாடு விதித்துக்கொள்கிறோம். விதிவிலக்கான நிகழ்வுகளில், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பொருத்தமானதாக உள்ள பரிசுகள், அழைப்பிதழ்கள் அல்லது நியாயமான மதிப்புக் கொண்ட பிற நன்மைகள் அனுமதிக்கப்படுகின்றன.

உங்கள் அன்றாட வணிகத்திற்கு நம்பகமான வழிகாட்டுதலை வழங்குவதற்கு, Exyte லஞ்ச மற்றும் ஊழல் தடுப்புக் கொள்கை பரிசுகளுக்கான வரம்புகளை வரையறுக்கிறது மற்றும் அழைப்பிதழ்களுக்கான கட்டமைப்பை உறுதிசெய்கிறது.



வரம்புகளுக்கு உட்பட்ட பரிசுகள் அதைப் பெறுபவர் மீது எந்த வகையிலும் முறையற்ற செல்வாக்கைப் பெறும் நோக்கம் கொண்டதாக இல்லை எனக் கருதப்பட்டால், மரியாதை நிமித்தமாக அவற்றைக் கொடுக்கலாம். உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால், நீங்கள் Exyte Compliance Team-ஐக் கலந்தாலோசிக்க வேண்டும்.
பெருநிறுவன உபசாரத்திற்கு என நிலையான வரம்புகள் எதுவும் வரையறுக்கப்படவில்லை. Exyte Compliance Team முன் அனுமதி அளித்திருக்கும் பட்சத்தில் கண்ணியமான மற்றும் நியாயமான தன்மை, நிகழ் அளவு மற்றும் செலவு ஆகியவற்றைக் கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளுக்கு வணிகக் கூட்டாளிகளை நீங்கள் அழைக்கலாம். மேலே தெரிவிக்கப்பட்ட தகுதி வரன்முறைகளைப் பூர்த்தி செய்கின்ற வணிக விருந்துகளுக்கு முன் அனுமதி தேவையில்லை.

உங்களுடைய வணிகக் கூட்டாளிக்கு கடுமையான விதிகள் கூட பின்பற்றப்படலாம் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். எனவே, ஏதாவது பரிசுகள் அல்லது அழைப்பிதழ்களை அளிப்பதற்கு முன் அவர்களின் நடத்தை நெறிமுறையை நீங்கள் எப்போதும் சரிபார்க்க வேண்டும்.

எமது **சேவைகள்** மற்றும் **தயாரிப்புகளின்** மிகச் சிறந்த **»தரம்** மூலம் **நாம்** நமது வாடிக்கையாளர்களை **திருப்திப்படுத்துகிறோம்**. சிறப்பான எதையும் நாம் வழங்க வேண்டியதில்லை.

## பரிசுகள், உபசாரம் மற்றும் பிற ஆதாயங்களை ஏற்றுக்கொள்ளுதல்

Exyte–இல், வணிகக் கூட்டாளிகள் முற்றிலும் தரம், செயல்திறன் மற்றும் விலை போன்ற புறநிலை வரன்முறைகளுக்கு இணங்க தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கொள்கையின் படி, நமது வணிக முடிவுகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஆபத்து அல்லது எண்ணங்களைத் தவிர்ப்பதற்காக, நாம் பரிசுகள் அல்லது அன்பளிப்புகளை ஏற்றுக்கொள்வதில்லை. தற்போதைய அல்லது எதிர்கால வணிக கூட்டாளிகளிடம் இருந்து Exyte பணியாளர்கள் ஆதாயங்களைக் கோருவது அல்லது வற்புறுத்துவது அல்லது அதில் ஆர்வம் காட்டுவது கூட கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது.

சிறிய மதிப்புள்ள பரிசுகளால் நமது வணிக முடிவுகளில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என யாரும் நினைக்க மாட்டார்கள் என்பதால் நீங்கள் பரிசுகளை ஏற்றுக்கொள்ளலாம். அதிக மதிப்புடைய பரிசுகள் Exyte Anti-Bribery and Corruption Policy–யில் விளக்கிக் கூறப்பட்ட வரம்புகளை மீறும் பட்சத்தில் அவை மறுக்கப்பட வேண்டும் அல்லது திருப்பி அனுப்பப்பட வேண்டும். வணிக அல்லது கலாச்சாரக் காரணங்களுக்காக இது சிரமமானதாக இருந்தால், வணிக உறவுகளைப் பாதுகாப்பதற்காக சரியான அணுகுமுறையைக் கண்டறிய Exyte Compliance Team உங்களுக்கு உதவும்.

நமது வணிகத்துடன் நேரடித் தொடர்பு இருந்தால் மற்றும் அது கண்ணியமானதாகவும் தன்மை, நிகழ் அளவு மற்றும் செலவு நியாயமானதாகவும் இருந்தால் மட்டுமே விருந்து மற்றும் நிகழ்ச்சிகளுக்கான அழைப்பிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஆயினும் கூட, அத்தகைய விருந்து அல்லது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கான பயணச் செலவு அல்லது தங்குமிடச் செலவு எப்போதும் Exyte–ஆல் ஏற்கப்பட வேண்டும். நிகழ்ச்சிகளுக்கான அழைப்பிதழ்கள் Exyte Compliance Team–ஆல் முன் அனுமதி அளிக்கப்பட்டிருந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். மேலே தெரிவிக்கப்பட்ட தகுதி வரன்முறைகளைப் பூர்த்தி செய்கின்ற வணிக விருந்துகளுக்கு முன் அனுமதி தேவையில்லை.

» நமது வணிக முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் **என்ற தோற்றத்தைத் தவிர்ப்பதற்காக வணிகக் கூட்டாளிகள் வழங்கும்.**

# 2.2 அரசு அதிகாரிகளைக் கையாளுதல்



**அரசு அதிகாரிகளைக் கையாளும்போது லஞ்சம் மற்றும் ஊழல் சட்டங்கள் மீறப்படுவதற்கான ஆபத்து கணிசமான அளவு அதிகமாக இருக்கிறது. எனவே, தவறான செல்வாக்குக்கான ஆபத்து அல்லது உணர்வுகளைத் தவிர்ப்பதற்காக அரசு அதிகாரிகளுக்கு எதையாவது கொடுப்பது அல்லது அவர்களிடமிருந்து பெறுவது கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது.**

பல நாடுகளில், அரசு ஊழியர்கள் மட்டுமல்லாது அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின், பொதுச் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள (உ.ம். ஆற்றல் விநியோகம்) தனியார் நிறுவனங்களின் நிர்வாக அதிகாரிகள் அல்லது பொது சர்வதேச நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களும் கூட அரசு அதிகாரிகளாக கருதப்படுகிறார்கள். ஒரு அரசு அதிகாரியாக இருப்பதற்குச் சாத்தியமுள்ள ஒரு நபருக்கு எதையாவது கொடுப்பது பற்றிப் பரிசீலிப்பதற்கு முன்னர் நீங்கள் எப்போதும் Exyte Compliance Team–இன் ஒரு உறுப்பினருடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

**அரசு அதிகாரிகளையும்** அத்தகைய தகுதியைப் பெற்றுள்ள நபர்களையும் கையாளும்போது,

» **எப்போதும் Exyte Compliance Team ஐக் கலந்தாலோசிக்கவும்.**

# 2.3 முகவர்களையும் ஆலோசகர்களையும் ஈடுபடுத்துதல்

**ஆலோசகர்கள் அல்லது முகவர்கள் இலஞ்சம் வாங்குவதைத் தவிர்க்க, கிளையன்ட் செயல்திட்டங்கள் அல்லது வணிகங்களை வெற்றிகொள்வதில் ஈடுபட்டுள்ள ஆலோசகர்கள் மீது எக்ஸைட் கன்சல்டன்சி (Exyte Consultancy) கொள்கை ஒரு பொதுவான தடை விதித்துள்ளது. மேலும், இது வேறு ஏதாவது ஆலோசனைச் சேவைகளின் வெளிப்படையான கொள்முதலுக்கு ஒரு வலுவான கட்டமைப்பை வழங்குகிறது.**

வணிகத்தைப் பெற அல்லது புதிய சந்தைகளில் நுழைய இடைத்தரகர்களைப் பயன்படுத்துவது குறிப்பாக துஷ்பிரயோகத்திற்கு இலக்காவதற்கான வாய்ப்பு உள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்தகைய ஆலோசனைச் சேவைகளின் செயல்திறனை அளவிடுவது பொதுவாக கடினமானதாக இருக்கிறது, மற்றும் இலாபங்கள் பொதுவாக வெளிப்படையாகத் தெரிவதில்லை என்பதால் இலஞ்சம் கொடுக்க இலாபத் தொகை பயன்படுத்தப்படுவதற்கும் இது வழிவகுக்கும். இந்தக் காரணத்திற்காக, எக்ஸைட் (Exyte) நிறுவனத்தில் கிளையன்ட் செயல்திட்டங்கள் அல்லது வணிகங்களை உருவாக்க அல்லது வெற்றி பெற ஆலோசகர்களை ஈடுபடுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. இந்தக் காரணத்திற்காக, எக்ஸைட் (Exyte) நிறுவனத்தில் கிளையன்ட் செயல்திட்டங்கள் அல்லது

ஒரு பொதுவான கொள்கையாக, ஆலோசகர்களின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். விதிவிலக்கான நிகழ்வுகளில் மட்டுமே நாங்கள் ஆலோசகர்களை ஈடுபடுத்துகிறோம். மேலும், அது எப்போதும் எக்ஸைட் கன்சல்டன்சி (Exyte Consultancy) கொள்கையுடன் கடுமையான இணக்கத்திற்கு உட்பட்டதாகும்.

தயவுசெய்து » **சுருக்கத் தொகுப்பு வாக்கியத்தில்** நகல் செய்யவும்.

# 2.4 நன்கொடைகள் மற்றும் நிதியளிப்புகளுக்கான விதிகள்

**ஒரு சிறந்த பெறுநிறுவனக் குடிமகனாக, Exyte அறச் சிந்தனையுள்ள மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களையும், நமது சமுதாயத்தில் மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகளையும் ஆதரிக்கிறது. அத்தகைய அமைப்புகள் மற்றும் முயற்சிகளுக்கான நன்கொடைகள் அனைத்தும் பொருந்தக்கூடிய Exyte கொள்கைகளுக்கு இணங்க அங்கீகரிக்கப்பட வேண்டும்.**

நன்கொடை அறச் சிந்தனை நோக்கத்துக்காக கொடுக்கப்பட்டிருந்தாலும் கூட, அது கூட லஞ்சமாக இருக்கலாம். பெறுபவர்கள் மீது ஆபத்து அல்லது தவறான செல்வாக்குக்கான உணர்வு ஏற்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு, நன்கொடைகளையும் நிதியளிப்புகளையும் நமது வணிகத்தில் சேர்க்காமல் இருக்கலாம்.

அறச் சிந்தனையுள்ள **வேலை மற்றும் வணிகத்தை** நாம் » **ஒன்றோடொன்று கலப்பதில்லை.**



# 03 | நியாயமான விதிமுறைகளின் அடிப்படையில் போட்டியிடவும்

**Exyte-இல், நியாயமான, சட்டரீதியான மற்றும் வெளிப்படையான போட்டியில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். Exyte-இன் வெற்றி நமது பணியாளர்களையும், நமது சேவைகள் மற்றும் தயாரிப்புகளின் மிகச் சிறந்த தரத்தையும், நமது வாடிக்கையாளரின் கவனத்தையும் சார்ந்திருக்கிறது. நாம் எப்போதும் போட்டிச் சட்டங்களைக் கடைப்பிடிக்கிறோம் மற்றும் போட்டியாளர்களுடன் இரகசிய நடைமுறைகள் அல்லது ஒத்துழைப்பு ஏற்படுத்துவதன் மூலம் நமது வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை நாம் எப்போதும் ஆபத்துக்கு உள்ளாக்குவதில்லை.**

மூன்றாம் தரப்பினருடன் விலைகள் அல்லது மற்ற வர்த்தக ரீதியிலான விதிமுறைகள் மற்றும் உத்திகள் தொடர்பாக, உதாரணமாக ஒப்பந்தப் புள்ளிகளை ஒருங்கிணைப்பது அல்லது போட்டியாளர்களுடன் இரகசிய விலைநிர்ணயம் செய்வது ஆகியவற்றின் மூலம், போட்டிக்கு எதிரான ஒப்பந்தங்கள் எதையும் நாங்கள் செய்ய மாட்டோம். இது முறையான ஒப்பந்தங்களுக்கு மட்டுமல்லாது, போட்டியைக் கட்டுப்படுத்தக்கூடிய எந்த வகையான முறைசாரா ஒப்பந்தத்துக்கும் பொருந்தும். போட்டியாளர்களிடையே வணிகரீதியாக பொருத்தமான தரவுகளின் பரிமாற்றம்தடைசெய்யப்பட்டுள்ளதுஎன்பதைநினைவில்கொள்ளுங்கள், மற்றும் போட்டிக்கு எதிரான உள்நோக்கம் இல்லையென்றாலும் கூட தகவல்களைப் பெறுவதும் தெரியப்படுத்துவதும் கூட போட்டிச் சட்டங்களை மீறுவதாக இருக்கலாம்.

நமது போட்டியாளர்கள் அதே வழியில் செயல்பட வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். வணிக ரீதியாக முக்கியமான தகவல்களைப் பற்றி விவாதிக்க அல்லது எமது வணிகக் கூட்டாளிகளுக்கான விலைகளை அல்லது விதிமுறைகளைப் பாதிக்கின்ற ஏற்பாடுகளைச் செய்ய எங்கள் போட்டியாளர்களில் ஒருவர் உங்களை எப்போதாவது அணுகி இருந்தால், அத்தகைய விவாதங்களில் அல்லது ஏற்பாடுகளில் ஈடுபடுவதற்கு நீங்கள் வெளிப்படையாக மறுப்புத் தெரிவிப்பதோடு அந்தச் சம்பவத்தைப் பற்றி உடனடியாக Exyte Compliance Team-இன் உறுப்பினர் ஒருவரிடம் புகார் செய்ய வேண்டும்.

நாம் நமது வணிகத்தின் விதிமுறைகள் மற்றும் மூலோபாயங்களை
» **நமது போட்டியாளர்களின் சார்பின்றி தீர்மானிக்கிறோம்.**

# 04 | கருத்து வேறுபாடுகளைத் தடுத்தல்

**நமது வணிக முடிவுகள் பிரத்தியேகமாக பாரபட்சமற்ற வரன்முறைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன, தனிப்பட்ட நலன்களால் அவற்றுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுத்த முடியாது. நிறுவனத்தின் நலன்களை விட தங்களுடைய சொந்த நலனுக்கு முக்கியத்துவம் தரும் பணியாளர்கள் நிறுவனத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.**

உதாரணமாக, சப்ளையர்களிடம் இருந்து நீங்களோ அல்லது உங்களுடைய உறவினர்களோ பொருளாதார நலன்களைப் பெறும்போது Exyte சார்பாக பொருட்களை அல்லது சேவைகளை நீங்கள் கொள்முதல் செய்தால் கருத்து வேறுபாடுகள் எழக்கூடும். வரிசை மேலாளருக்கும் அவருடைய கீழ்நிலை ஊழியர்களுக்கும் இடையே குடும்ப உறவுகள் அல்லது அதனை ஒத்த நெருங்கிய தனிப்பட்ட உறவுகள் நிலவுவது பணியாளர்கள் சார்ந்த முடிவுகள் ஒருபுறச் சார்பாக இருப்பதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும், எனவே அது தவிர்க்கப்பட வேண்டும். இரண்டாவது தொழில் பணியாளர்களின் கடமைகளுடன் குறுக்கிடுவதாக இருக்கக் கூடாது மற்றும் அது நமது உட்புற விதிகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க பொறுப்பிற்குரிய மேலாளரின் முன் அனுமதி பெற்றதற்குப் பின்னரே அனுமதிக்கப்பட வேண்டும்.

கருத்து வேறுபாடு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு, பணியாளர்கள் சாத்தியமுள்ள அல்லது உண்மையான கருத்துவேறுபாடுகளை தங்களுடைய மேலாளர்களிடம் அல்லது HR Business Partners-யிடம் தெரிவிக்க வேண்டும். கருத்து வேறுபாடு ஏற்படும் சூழ்நிலைகளில் தொடர்புடைய முடிவுகளை எடுப்பதற்கு மற்றவர்களுக்கு அனுமதி அளியுங்கள்.

» வெளிப்படையான மற்றும் ஒளிவுமறைவில்லாத தகவல்தொடர்பு **மூலம் நாங்கள் கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்கிறோம்.**

# 05 | சுயாதீனமான மதிப்பாய்வை உறுதிசெய்யவும் - நான்கு-கண்கள் கொள்கை

அனைத்து வணிகப் பரிவர்த்தனைகளும் முக்கிய முடிவுகளும் நான்கு-கண்கள் கொள்கைக்கு உட்பட்டதாக இருக்கும். நான்கு-கண்கள் கொள்கை என்பது சுதந்திரமான மதிப்பீட்டைக் குறிக்கிறது மற்றும் அது சம்பந்தப்பட்ட பரிவர்த்தனையில் ஈடுபட்டுள்ள இரண்டு அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. நான்கு-கண்கள் கொள்கையின் விளைவாக, Exyte–யின் உட்புற ஒழுங்குவிதிகளுக்கு இணங்க எழுத்துவழி வெளிப்புற தகவல்தொடர்புக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து இரண்டு கையொப்பங்கள் தேவைப்படுகின்றன. விதிவிலக்கான சூழ்நிலைகளில், அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் வாய்மொழியாக ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் இரண்டாவது கையொப்பம் கைவிடப்படலாம். அத்தகைய ஒப்புதல் எழுத்துப்பூர்வமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். இந்த நடைமுறையுடனான இணக்கத்துக்கு கையொப்பமிடும் நபரே முழுப் பொறுப்பேற்க வேண்டும்.



**நான்கு-கண்கள்** கொள்கை

» **அனைத்து வணிகப் பரிவர்த்தனைகளுக்கும் பொருந்தக்கூடியதாகும்.**

# 06 | துல்லியமான மற்றும் வெளிப்படையான நிதிப் பதிவேடுகளைப் பராமரிக்கவும்

சரியான கணக்குப்பதிவு மற்றும் நிதி அறிக்கையானது நமது நிறுவனத்தின் வெற்றிக்கான முன் நிபந்தனையாக விளங்குகிறது மற்றும் பங்குதாரர்கள் மற்றும் வணிக கூட்டாளிகளிடம் நம்பிக்கையை உருவாக்குவதற்கும் அதைத் தொடர்ந்து பராமரிப்பதற்கும் அடிப்படையாக விளங்குகிறது. அதோடு, முறையற்ற அல்லது மோசடியான ஆவணப்படுத்தல் அல்லது பதிவு கூட சட்டவிரோதமானதாகும். ஏதேனும் முறைகேடுகள் ஏற்பட்டிருந்தால் அது நிறுவனத்தின் மீதும், அத்தகைய முறைகேடுகளுக்குப் பொறுப்புடைய பணியாளர்கள் மீதும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

துல்லியம் மற்றும் ஒளிவுமறைவின்மை நமது வெளிப்புற நிதி அறிக்கைக்கு மிகவும் முக்கியமானதாகும். நாங்கள் அந்தந்தக் காலகட்டத்துக்குரிய நிதி அறிக்கைகளை தேசிய மற்றும் சர்வதேச கணக்கியல் விதிமுறைகளுக்கு இணங்க உரிய நேரத்தில் வெளியிடுகிறோம்.

துல்லியமான மற்றும் ஒளிவுமறைவில்லாத நிதிப் பதிவேடுகளைப் பராமரிப்பதன் தேவை நம்முடைய வெளிப்புற நிதி அறிக்கைகள் மற்றும் அறிக்கையளித்தல் கடமைப்பொறுப்புகளுக்குத் தொடர்புடையதாக இருப்பதோடு மட்டுமல்லாது, Exyte–இன் நிதி சார்ந்த கணக்குகளுக்கான அடிப்படையை உருவாக்குகின்ற அனைத்து உட்புற நிதித் தரவுகள் தொடர்புடையதாகவும் இருக்கிறது. அதே போல, வர்த்தகத் தரவுகளும் திட்டப் புள்ளிவிவரங்களும் துல்லியமாகவும் எதார்த்தமாகவும் இருப்பதை உறுதிசெய்ய திட்டக் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் அதற்குப் பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள்.

» **நமது நிதி சார்ந்த கணக்குகளின் நேர்மையைப் பராமரிப்பதற்கு நாங்கள் பொறுப்பேற்கிறோம்.**

# 07 | நிறுவனத்தின் சொத்துகளை கவனமாக கையாளவும்

## 7.1 சொத்துப் பாதுகாப்பு

உங்கள் வேலையைச் செய்ய உங்களுக்குத் தேவைப்படுகின்ற கருவிகள் மற்றும் உபகரணங்கள் அனைத்தையும் Exyte உங்களுக்கு வழங்கும். Exyte-இன் தொட்டுணரக்கூடிய சொத்துகள், அறிவுசார் சொத்து மற்றும் சேதம், இழப்பு, சமரசம் மற்றும் துஷ்பிரயோகம் பற்றிய தகவல்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பது உங்களுடைய பொறுப்பாகும்.

தனிப்பட்ட தகவல் என்பது நிறுவனத்தாலும் அதன் அனைத்துப் பணியாளர்களாலும் சிறப்புக் கவனமும் பாதுகாப்பும் தேவைப்படுகின்ற ஒரு சொத்து ஆகும். தனிப்பட்ட தகவல்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய தொழில்நுட்ப ரீதியான மற்றும் நிறுவன ரீதியிலான நடவடிக்கைகளை Exyte அறிமுகப்படுத்தியுள்ளது, Exyte Group-இன் அனைத்து உறுப்பினர்களும் இந்த நடவடிக்கைகளைச் செயல்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிறுவனத்தின் சொத்துகளை தனிப்பட்ட நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கு நமது உட்புற விதிகளால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களால் திட்டவட்டமாக அனுமதிக்கப்பட்டால் மட்டுமே நீங்கள் அவ்வாறு பயன்படுத்தலாம். வணிகக் கூட்டாளிகளின் உடைமைகளும் சொத்துகளும் ஒரே முறையில் ஒரே கவனிப்புடன் நடத்தப்பட வேண்டும்.

நாம் » **நிறுவனத்தின் சொத்துகளை** வணிக நோக்**கங்களுக்காக** மட்டுமே பயன்படுத்து**கிறோம்** மற்றும் **அவற்றை கவனத்துடன் கையாளுகிறோம்.**

## 7.2 இரகசியத் தகவல்களைப் பாதுகாத்தல்

அறிவு மற்றும் செய்நுட்பத் திறன் ஆகியவை Exyte–இன் வெற்றிக்கு முக்கியமானதாக உள்ளது. Exyte–இன் வர்த்தக இரகசியங்களையும் மற்ற இரகசியத் தகவல்களையும் பாதுகாப்பது நமது நிறுவனத்தின் எதிர்காலத்துக்கு மிகவும் முக்கியமானது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஒரு செயல்திட்டத்தின்போது அல்லது ஒரு செயல்திட்டத்தை ஒதுக்குவதற்கு முன்னதாகவே கூட நமது வணிகக் கூட்டாளிகள் குறித்து நமக்கு வழங்கப்படும் தரவுகளிலும் இதே அளவிலான அக்கறையும் கவனமும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அனைத்து இரகசியத் தகவல்களும், அது Exyte சார்ந்ததாக இருந்தாலும் அல்லது நமது வணிகக் கூட்டாளிகள் சார்ந்ததாக இருந்தாலும், பொறுப்பான முறையில் கையாளப்பட வேண்டும். இரகசியமான தகவல்களைக் குறித்து வையுங்கள், அதைப் பாதுகாப்பாக வையுங்கள் மற்றும் அதைத் தெரிந்துகொள்ள வேண்டிய தேவை இருப்பவர்கள் மட்டுமே அதை அணுகுமாறு அதற்கான அணுகலைக் கட்டுப்படுத்துங்கள். உங்களுடைய பணிக்காலத்தின் போது உங்களுக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களை, உங்களுடைய பணிக்காலத்தின் போதோ அல்லது உங்களுடைய பணிக்காலம் முடிந்த பிறகோ, அத்தகைய தகவல் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்படும் வரை நீங்கள் அதை வெளியில் தெரிவிக்கக் கூடாது.

மற்றும் நமது வணிகக் கூட்டாளிகளின் இரகசியத் தகவல்களைப் பாதுகாக்க

**» நாங்கள் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.**



# 08 | உள்நபர் வர்த்தகம் கூடாது

பொதுவில் பட்டியலிடப்பட்ட நிறுவனம் பற்றிய இரகசியத் தகவல்களுக்கான அணுகலைக் கொண்டுள்ள ஒருவர் (உ.ம். வாடிக்கையாளர்கள், துணை ஒப்பந்ததாரர்கள் அல்லது Exyte நிறுவனம்) – அத்தகைய தகவல் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தால் - இத்தகைய பகிரங்கமாக வர்த்தகம் செய்யப்படும் நிறுவனத்தின் பங்குகளின் சந்தை விலையில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவராக இருந்தால் அவர் "உள்நபர்" எனக் கருதப்படுகிறார். உள்நபர் தகவல் சிறப்புக் கவனத்துடன் கையாளப்பட வேண்டும். உள்நபர் தகவல்களை நீங்கள் உங்களுடைய சொந்த வர்த்தக நோக்கங்களுக்காக அல்லது அறிவுரை வழங்குவதற்காக அல்லது தங்களுடைய பங்குகளை விற்பனை செய்வதற்கு அவர்களுக்குத் துப்பு அளிப்பதற்காக ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது. உள்நபர் வர்த்தகம் என்பது ஒரு சட்டமீறல் ஆகும்.



**உள்நபர் தகவல்களைக் கையாளுவதற்கான » சிறப்புத் தேவைகளைப் பற்றி நாம் அறிந்திருக்கிறோம்.**

# 09 | பன்முகத்தன்மை மற்றும் நியாயமான உழைப்பு

கலாச்சார பன்முகத்தன்மை என்பது நமது நிறுவனத்தில் ஒரு செழுமையை உருவாக்குகின்ற ஒரு பலம் ஆகும். Exyte–இல் பன்முகத்தன்மை மேலாண்மை என்பது உதாரணமாக, ஆட்சேர்ப்பு அல்லது ஆதாயங்கள் தொடர்பான முடிவுகள் உட்பட அனைத்து பணிநியமன முடிவுகளை மட்டுமே குறிப்பிடுவதல்ல, அது இனம், நிறம், மதம், தேசிய பூர்வீகம், பாலினம், வயது, உடல் ஊனமுற்றவர், இயலாமை, பாலியல் நாட்டம், அல்லது சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட வேறு ஏதாவது நிலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். மேலும் அது, நமது பணியாளர்களிடம் நமக்கு உள்ள பெருமிதத்தையும், அவர்களுடைய வேறுபாடுகளிலிருந்து கிடைக்கும் ஆதாயங்களையும், தனிப்பட்ட முறையில் அவர்களுக்கு அளிக்கும் ஆதரவையும் குறிக்கிறது.

பன்முகத்தன்மை என்பது நாம் பாகுபாடு காட்டுவதில்லை என்பதைக் குறிக்கிறது, மேலும் பாகுபாடு காட்டுவதை நாம் பொறுத்துக்கொள்வதில்லை என்பதையும் குறிப்பிடுகிறது. அனைத்துப் பணியாளர்களும் தங்களை ஒருவருக்கொருவர் மரியாதையுடனும் நியாயமாகவும் நடத்தவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வேலையில் பாகுபாடு காட்டுதல் அல்லது துன்புறுத்தல் எந்த வகையிலும் பொறுத்துக்கொள்ளப்பட மாட்டாது. ஏதேனும் குற்றங்கள் செய்தால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நியாயமான தொழிலாளர் நிலைமைகளுக்காக நாங்கள் போராடுகிறோம் மற்றும் கட்டாய அல்லது குழந்தைத் தொழிலாளர் மற்றும் நியாயமான சம்பளம் தொடர்பாக பொருந்தக்கூடிய தேசிய ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி நடக்கிறோம். தொழிலாளர் சட்டங்கள் மீறப்படுவதற்கான அறிகுறிகளை விழிப்புடன் கவனிக்குமாறும், அத்தகைய அறிகுறிகளை உன்னிப்பாக கண்காணிக்குமாறும் அனைத்துப் பணியாளர்களையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

பன்முகத்தன்மையை நாங்கள் ஒரு பலமாகப் பார்க்கிறோம்,
» **நேர்மைக்கு ஆதரவு வழங்குகிறோம் மற்றும் நமது வணிகக் கூட்டாளிகளுடன்** நமது பணியாளர்கள் கொண்டிருக்கும் மரியாதைக்குரிய ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறோம்.

# 10 | Exyte Code of Conduct–ஐ அமல்படுத்தவும்

அனைத்து Exyte Group பணியாளர்களும் Exyte Code of Conduct–ஐப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும், அதை தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இது, ஒதுக்கீடு செய்யப்பட்ட இணக்கப் பயிற்சியில் பங்கேற்பது மற்றும் உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால் அல்லது உங்களுடைய கடமைகளில் உங்களுக்கு சந்தேகம் இருந்தால் Exyte Compliance Team இடமிருந்து ஆலோசனை கோருவது ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

மேலாளர்கள் தங்களுடைய அணி உறுப்பினர்களுக்கு Exyte Code of Conduct பற்றி தெரியப்படுத்த வேண்டும் என்றும், இணக்கத்தின் முக்கியத்துவம் பற்றி தங்கள் அணியினருக்கு வலியுறுத்துக் கூற வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அவர்கள் தேவைப்படும் செயல்முறைகளுடனான இணக்கத்தைக் கண்காணிக்க வேண்டும் எனவும், பொருந்தக்கூடிய சட்டங்களுக்கும் Exyte Code of Conduct–க்கும் இணங்கி நடப்பதற்கும், நேர்மையாகச் செயல்படுவதற்கும் முன்மாதிரியாக இருப்பதற்கான தங்களுடைய சிறப்புப் பொறுப்பைப் பூர்த்தி செய்ய வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

Exyte Code of Conduct-க்கு இணங்கி நடப்பது என்பது ஒவ்வொரு பணியாளரின் » **தனிப்பட்ட பொறுப்பு** ஆகும்.

அனைத்து **» மேலாளர்களும் தாங்கள் பொறுப்பேற்றுள்ள பகுதியில் இணக்கத்தை** உறுதிசெய்வதற்குப் பொறுப்புடையவர்கள் ஆவர்.



COMPLIANCE
» The right way « exyte

## உங்கள் தொடர்புகள்

**Dr. Steffen Liebendörfer**
Vice President Compliance
Exyte Management GmbH
70376 Stuttgart
Germany
T +49 711 8804-1045
Steffen.liebendoerfer@exyte.net

**Dr. Julia Melzer**
Compliance Manager
Exyte Management GmbH
70376 Stuttgart
Germany
T +49 711 8804-4119
Julia.melzer@exyte.net